புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கலித்தொகை நெய்தற்கலியில் தலைவியின் உளவியல்

வே.ரத்னா,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் – 641043.

முனைவர் மு.கவிதா,
நெறியாளர் & உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்விநிறுவனம்,கோயம்புத்தூர்-43

ஆய்வுச்சுருக்கம் :

இலக்கியம் என்பது உளவியல் சிந்தனையின் கருவூலமாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், உள்ளத்தை பண்படுத்தும் உயர்படைப்பாகவும், உணர்வுகளைத் தூய்மைப்படுத்தும் எழுத்தோவியாகவும், நம் இலக்கியங்கள் திகழ்கின்றது. கலித்தொகையில் இடம்பெறும் நெய்தற்கலியில் உளவியல் பண்போடு தலைவியின் சிந்தனை, உணர்ச்சிகள், வாழ்வின் ஏற்றத்தாழ்வுகள், இன்பதுன்பங்கள் முதலிவற்றை ஆராய்ந்து, வாழ்வில் தோன்றும் சிக்கல்களுக்கு தெளிவான தீர்வு காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

உளவியல்- மன இறுக்கம் – உறக்கமின்மை - விரக்தி நிலை- இற்செறித்தல் – மடலேறுதல்

## முன்னுரை :

சங்க அக இலக்கியத்தில் களவு கற்பு வாழ்க்கையில் பெண்களுக்குரிய இயல்புகள் இன்பமும்துன்பமும் கலந்து நிற்பனவாக இடம்பெற்றுள்ளன. சமுதாயத்தின் நிலைத்த தன்மைக்கும் குடும்ப அமைப்பின் நற்சூழல் இன்றியமையாத ஒன்றாகும். சிறப்பு மிக்க கற்பியல் வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் யாரும் அறியாதுகொண்டிருந்த களவு வாழ்க்கை ஊரார் அறிய ஒன்றிணைந்து வாழக்கூடிய திருமண நிகழ்விற்குப் பிறகே கற்பு வாழ்க்கையாக மாறுகின்றது என்பதைச் சங்க அகஇலக்கியங்கள் காட்டுகின்றன. களவுக்காலத்தில் நிகழ்ந்த பல்வேறு போராட்டங்களுக்கு இடையில் காதல் கைகூடிப்பெற்றோரின் விருப்புடனோ அல்லது இல்லாமலோ ஏதேனும்ஒருவகையில் பெண்ணும் ஆணும் தாம் விரும்பியவாறே ஒன்றிணைந்து குடும்பமாக வாழத் தொடங்கக் கூடிய சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை முறையினையே கற்பு வாழ்க்கை காட்டுகின்றது. இதனை கலித்தொகைநெய்தற்கலியில் தலைவியின் உளவியல் வழிநின்று ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## உளவியல் வரையறை :

மனித உள்ளத்தைப் பற்றி ஆராயும் அறிவியல் முறையேஉளவியல். இதில் உள்ளம் தொடர்பான செயல்களும் நிகழ்வுகளும் அடங்கும்.மனித மனத்தின் செயல்பாடு மற்றும் மனிதனின் நடத்தையைப் பற்றிய அறிவியல் கல்வியே உளவியல் என வரையறுக்கப்படுகிறது. மனத்தின் சொற்பாடுஎன்பதில் மனிதனின் சிந்தனை நினைவு கனவு உள்ளுணர்வு நம்பிக்கை ஆகியவையும் அடங்கும். மனிதனின் புறச் செயல்களை உற்று நோக்கும்முறையாக ஆராய்ந்து எடுத்துரைக்கின்றது. சங்ககாலப் புலவர்கள் அகத்திணைப் பாடல்களில் யார் பெயரையும் குறிப்பிடாமல் பாத்திரங்களைப்படைத்துள்ளனர்.இதனை

*"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்*
*சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறா"*
*(தொல்.பொ.அ.நூ.57)*

*என்று தொல்காப்பிரின் கோட்பாட்டின் படி மாந்தர்களின் இயற்பெயர் சுட்டமால் இருப்பதை அறியமுடிகிறது.*

*" பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய*
*திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே" (தொல்.பொ.அ.நூ.22)*

*என்ற கருத்துப்படி அந்தந்த நிலத்தில் வாழும் மக்களுக்குஏற்றார் போல் பொதுப்பெயர்களே சுட்டப்பட்டுள்ளன.*

*கலித்தொகையில் நெய்தற்கலி;:*

*கலித்தொகையின் இறுதித் திணையாக அமைந்துள்ள நெய்தற் திணை 33 பாடல்களை கொண்டது. இதனைப் பாடியவர் நல்லந்துவனார் ஆவார்.இவரே கலித்தொகை முழுவதையும் தொகுத்தவர். 'அந்துவன்" என்பது இவருடைய இயற் பெயராகும். 'நல்" என்பது சிறப்பை உணர்ந்தும் அடைமொழி. 'ஆர்" என்னும் விகுதியும் இறுதியில் சேர்க்கப்பட்டு இவர் நல்லந்துவனார் என அழைக்கப்படுகிறார்.இவர் மதுரையைச் சேர்ந்தவர் என்பதை வலியுறுத்தும் விதமாக இவருடைய பாடல்கள் அமைந்துள்ளது. கலித்தொகையில் 34 பாடல்களைப் பாடியதோடு இவர் நற்றிணையில் 1 பாடலையும் அகநானூற்றில் 1 பாடலையும் பரிபாடலில் 4 பாடலையும் திருவள்ளுவ மாலையில் 1 பாடலையும் பாடியுள்ளார்.*

*நெய்தற்கலியில் தலைவி:;*

*நெய்தற் கலியில் தலைவியின் காதல் நோய்அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. இதனால் தலைவியின் மனநிகழ்வுகளைக் காணமுடிகின்றது. மாலை நேரம்வந்துவிட்டது. அந்த மாலை நேரம் காதலுருடன் கூடியிருக்கும் மங்கைக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. என்னைப் போன்ற மகளிருக்கு வருத்தத்தைத் தருகிறது. எனவே மாலை நேரமே இனி தலைவன் இல்லாத போதுவராதே என்று தலைவி பிதற்றுகிறாள். ஒரு தலைவி தாமரை மலரைப் பார்த்து ஏங்குகிறாள். இவ்வாறு புலம்பிக்கொண்டிருக்கும் தலைவிக்கு மகிழ்ச்சி காத்திருக்கிறது.காதலன் வந்து விட்டான். இதனை*

*"இடன் இன்று அலைத்தரும் இன்னாசெய்மாலை*
*துனிகொள் துயர் தீரக் காதலர் துனைதர*
*மெல்லியான் பருவத்து மேல் நின்றுகடும் பகை*
*ஒல்லென நீக்கி ஒருவாது காத்து ஆற்றும்*
*நல் இறை தோன்ற கெட்டாங்கு*
*இல்லாகின்றால் இருளகத்து ஒளித்தே" (கலி-119.)*

*என்று காதலன் வரவால் மகிழ்ச்சியுடன் இருந்தாள்.*

*இரங்கல் நிகழ்வு :*

*தலைவன் தலைவி ஆகிய இருவரிடமும் அகவாழ்வில் இரங்கல் நிகழ்ச்சி ஒன்றாகும். இச்செய்தியினை தலைவி தோழியிடம் கூறுகிறாள். இதனை தோழி தலைவனிடம் வெளிப்படுத்துகிறாள். தலைவன் மடலேறுதல், தலைவி தலைவனின் பிரிவினைப் பற்றி அஃறிணைகளிடம் தன் வருத்தை வெளிப்படுதல் போன்ற கூற்றுகள் மூலம் களவு காலத்தில் இரங்கல் நிகழ்ச்சி ஏற்படும்.தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றுள்ளபோது தலைவி தன் மன வருத்தையும்வெளிபடுத்துகிறாள்.தலைவன் இல்லாமல் தான் வாழ்வது மற்றவர் தன்னைப் பார்த்து சிரிக்கும் வகையில் உள்ளதாக அமைகிறது. இதனை தலைவி அதனால்*

*"யாம் நெடுநாள் துயில் கொண்டு ஒளித்த*
*காமநோயிற் கழீஇய நெஞ்சம்*
*தான் அவர் பாற்பட்டதாயின்*
*நாம் உயிர் வாழ்தலோ நகைநனி உடைத்தே" (நெ.கலி.16)*

எனும் பாடலடிகளில் தலைவி தன் மனவருத்தை வெளிபடுத்திகூறுகிறாள்.

தலைவி தலைவனைப் பற்றின காட்சிகளை கனவில்கண்டு கொண்டு தன் இரங்கல் பற்றின உணர்வுகளை தலைவி தோழியிடம் எடுத்துகூறுகிறாள். இதனை

"கனவினால் கண்டேன் தோழி காண்தகக்
கனவின் வந்த கானல்அம் சேர்ப்பன்
நனவின் வருதலும் உண்டு என
அனைவரை நின்றது என் அரும்பெறல் உயிரே" ( நெ.கலி.127)

எனும் பாடலடிகளில் தலைவி தலைவனைப் பற்றினகனவில் கண்ட காட்சிகளில் தலைவன் தன்மையற்றவனாகக் கனவில் கண்டேன் தோழி என்று தலைவி கூறுகிறாள்.தலைவி தலைவனைப் பிரிந்தால் ஏற்பட்டவருத்ததினை தலைவி இரங்கல் நிகழ்ச்சியில் தெரிவிப்பதாக உள்ளது. இதனை

" நனவினால் நல்காத வரைக் கனவினால்
காண்டலின் உண்டுஎன் உயிர்" ( குறள்-1213)

எனும் குறளில் வள்ளுவர் தலைவி தலைவனைப் பிரிந்து வாடும் போது தலைவி மேற்கொள்ளும் மனநிலையினைபற்றி எடுத்துகூறுகிறார்.

மடலேறுதல் :

மடலேறுதல் பற்றிய செய்திகள் கலித்தொகையில் நெய்தற்கலியில் கூறப்படுகிறது.மடல் ஏறினால் காதலில் வெற்றி பெற்று தலைவி மணந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தலைவன் மடலேறுவோன் என்கிற செய்தியினை தலைவன் தலைவியிடம் எடுத்துரைகிறான். இதனால் தலைவி தலைவனை எண்ணி அச்சம் மற்றும் வருத்தம் அடைகிறாள் .இதனை

" அரிதனின் தோன்றிய யாக்கை பரிபுதாம்
வேட்டவை செய்து ஆங்கு காட்டி மற்று
அறம் பொருள் இன்பம் என்ற அம்மூன்றின் ஒன்றன்
திறம் சேரார் செய்யும் தொழில்கள் அறைந்தன்று
அணிநிலைப் பெண்ணை மடல் ஊர்ந்து ஒருத்தி
அணிநலம் பாடி வரற்கு"

எனும் பாடலடிகளில் தலைவன் தான் விரும்பியதலைவியை மணம் செய்ய முடியாத நிலையில் தலைவன் ஊர் அறியும் படி தான் மடலேறு போதாக தலைவியிடம் உரைகிறான். இதனை கேட்ட தலைவி ஊர் அலர் தூற்றும் என்ற அச்சமும் தலைவனின் நிலையினையும் எண்ணி வருத்தமடைகிறாள்.

உப்பும் ஊடலும் :

தலைவனுக்கும் தலைவிக்கும் ஊடல்ஏற்பட்டுவிட்டது. காதல் இன்பத்திற்கு ஊடல் தேவைதான். ஆனால் அது நீண்டு விடலாகது. உணவிற்கு உப்பு எப்படியோ? அதுபோலதான் ஊடலும் இருக்க வேண்டும். ஊடல் அதிகமாகுதல் கூடாது என்று தலைவியிடம் தோழி கூறுகிறாள். அதனை ஏற்றுத் தலைவி ஊடலை விட்டுதலைவனிடம் பேசுகிறாள். இதனை

"மான் நூக்கி நீ அழ நீத்தவன் ஆனாது
நாணிலன் ஆயின் நலிந்து அவன் வயின்
ஊடுதல் என்னே அனி
இனி யாதும் மீக்கூற்றம் யாம் இலம் என்னும்
தகையது காண்டைப்பாய் நெஞ்சே பனி ஆனாப்
பாடு இல் கண் பாயல் கொள" (கலி-103)

என்று தலைவனுக்கும் தலைவிக்கும் இருக்கும் ஊடலைத்தீர்த்து வைக்கும் அன்புப் பாலமாகத் தோழி செயல்பட்டு வந்ததைக் காண முடிகின்றது. இஃது தோழியின்பண்புகளில் உயர்ந்த நிலையாகும்.

இரவு இன்னலும் :

நெய்தற் கலியில் தலைவனைச் சந்தித்த தோழி தலைவியின் இயல்பு வாழ்வு உன்னால் கெட்டு விட்டது. இனியேனும் காலம் தாழ்த்தாமல் விரைவாக வந்து தலைவியைத் திருமணம் செய்து கொள் என்று அன்பாகத் தலைவனிடம் கூறுகிறாள். இதனை

"பல நினைந்து இனையும் பைதல் நெஞ்சின்
அலமரல் நோயுள் உழக்கும் என் தோழி
மதி மருள் வாள் முகம் விளங்க
புது நலம் ஏர்தர பூண்க நின் தேரே" (கலி-125)

என்று தலைவனைத் தலைவியிடம் ஆற்றுப்படுத்தும் தோழியின் செயல் வியத்தக்கதாக அமைந்துள்ளது.தலைவி தன் கணவனைப் பிரிந்து வாடும் தலைவி மாலைக் காலத்தில் எல்லா உயிரினங்களும் தத்தம் இருப்பிடத்தைச் சேர்வதைக் கண்டு தன் கணவன் இன்னும் வராதது கண்டு மாலை நேரத்தின் கொடுமையைத் தோழியிடம் வெளிப்படுத்துவதாகப் இப்பாடல் அமைகிறது.

"அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து
செந்தீச் செவ்வழத் தொடங்க - வந்ததை
வாழ்இழை மகளிர் உயர்பொதி அவிழ்க்கும்
காலை ஆவது அறியார்
மாலை என்மனார் மயங்கியோரே" (நெய்.கலி.பா.எ.2)

எனும் பாடலில் இயற்கை நிகழ்ச்சிகளை கொண்டு இத்தகைய மாலைக்காலம் உடலிருந்து உயரினை எடுப்பது போல் உள்ளதாக தோழியிடம் தலைவி கூறுகிறாள். தன் துன்பத்தையும் மன வருத்தையும் வெளிப்படுத்தும் நிலைகளில் தலைவியின் உளவியல் பண்பு அமைகிறது.தலைவனின் பிரிவால் தலைவி தன் அழகு கெட்டிருப்பது தோகையிழந்த மயிலாகவும் ,வில்லினால் ஏற்பட்ட புண்ணைக் காட்டிலும் தனக்கு துன்பம் செய்வதாகவும் பகையை விடக் கொடியது என்றும் அவனுடைய நினைவு தன்னை தீயாகச் சுடுவதாகவும் இத்தகு துன்பத்தைத் தாங்கும் ஆற்றலின்றித் தன் துயரைத் தீர்க்க வேண்டியவர் தனக்கு செய்த நோயால் ஏற்படும் துன்பத்தைத் தோழியிடம் தலைவி எடுத்து கூறுவதாக அமைந்துள்ளது. இதனை

"உலமந்து
எழில் எஞ்சு மயிலின் சேர்க்கையின் நடுங்கி
வில்லினும் கடிது அவர் சொல்லினுள் பிறந்த நோய்
பகைமையிற்கடிது அவர்தகைமையின் நலியும் நோயும்
தீயுனும்கடிது அவர் சாயலிற் கனலும் நோய்
இன்னுயிர் போத்தரும் மருத்துவராயின்
யாங்காவது கொல் தோழி- ஏனையதூஉம்
தாங்குதல் வலித்தன்று ஆயின்
நீங்கரிது உற்றன்று அவர் உறீஇய நோயே" ((நெய்.கலி.பா.எ.20)

எனும் பாடலில் தலைவனின் பிரிவு தலைவியை ஆற்றுயிருக்கும் தன்மையை இழந்து தலைவி படும் வேதனையை வெளிப்படுத்தி கூறுகிறாள். தோழியின் இரங்கலைத் தலைவியானவள் அவர்கள் தன்னை இகழ்வதாக. நினைத்து இப்படியான ஒரு நிகழ்வு சமுதாயத்தில் ஏற்படாத. ஒன்றா என்று சினந்து பேசுவதாக இப்பாடல் அமைகிறது.

"ஒஒ
அமையும் தவறிலீர் மற்கொலோ ?- நகையின்
மிக்கதன் காமமும் ஒன்று என்ப. அம்மா
புதுநலம் பூவாடியற்று தாம் வீழ்வார்
மதி மருள. நீத்தக் கடை
என்னையே மூசிக் கதுஎயிது நோக்கன்மின் வந்து" (நெய்.கலி.பா.எ.30)

எனும் பாடலில் தலைவனின் பிரிவைத் தாங்காத. தலைவியின் நிலையினை கண்டுடோரின் இரங்கல் நிகழ்வின் நிகழ்ச்சிகளில் தலைவியின் வருத்தைக் காணமுடிகிறது.

முடிவுரை :

இலக்கியம் என்பது ஒரு காலகாட்டதில் வாழ்ந்தமக்களின் வாழ்வியல் நிலையினை கூறுவதாகும்.கற்றறிந்தார் ஏத்தும் கலி என்னும் பெருமிதத்தோடு சொல்லப்படுகின்ற. கலித்தொகையின் பாடலமைப்பு பாடிய புலவர்களின் திறன் மற்றும் சிறப்புகளோடு இனைந்து தலைவியின் உளவியல் சிந்தனைகளும் எடுத்துகூறப்படுகிறது.இலக்கியத்தை உணர்வுப் பூர்வமாகஅணுவுவதைவிட அதன் உள்ளணர்ச்சிகளை உட்பொருளாகஆய்வு செய்யும் போதுதான் அவை சிறப்பாக அமைகிறது.

*தொகுப்புரை :*

*சங்ககாலப் புலவர்கள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டுள்ளனர். இவை பாடலுக்கு கருத்தினை சேர்ப்பதோடு பல உளவியல் சிந்தனைகளையும் உள்ளடக்கியது.மெய்யின் வழி தோன்றக் கூடிய உணர்வுகளைத் தங்களின் பாடலில் புகுத்திக் கற்போர்க்கு நெகிழ்வூட்டும் வகையில் எண்ணற்ற உணர்வுகளை கொண்டு கலித்தொகைப் பாடல்கள் அமைந்துள்ளது.*

*துணைநூற்பட்டியல:;*

*1. மாணிக்கனார்.அ. - கலித்தொகை மூலமும் உரையும்*
*கழக வெளியீடு சென்னை முதற்பதிப்பு- 1973*
*2. இளம்பூரணனார்( உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம்*
*சாரதாபதிப்பகம் சென்னை முதற்பதிப்பு – 2005*
*3.பரிமேலழகர் ( உ.ஆ) - திருக்குறள் தென்னிந்தியசைவ சித்தாந்த நூற்பதிப்பு*
*கழகம் சென்னை முதற்பதிப்பு – 1998*
*4.சி.இலக்குவனார் – தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம்,*
*855 வடக்கு முதல் வீதி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, 1961.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********